THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

**"தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையும் கொடுத்து மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக" ஆதியாகமம் 27: 28**


ஜனவரி – 2026

(மடல் - 26) செய்தி – 01

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 1 |
| ஆயரம்மா மடல் | 2 |
| பெண்கள் பகுதி | 5 |
| Children's Corner | 7 |
| வேத வினாக்கள் | 18 |
| கோதுமை மணி | 21 |
| துணுக்குகள் | 23 |
| ஆலய பக்கம் | 25 |

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய ஆண்டில் தூது வழியாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டு முழுவதும் ஆண்டவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்திவந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நமது திருச்சபையின் ஆவிக்குரிய வாழ்விலும், பொருளாதாரத்திலும், நமது செயல் திட்டப் பணிகளிலும் ஆண்டவன் நம்மை வளர்ச்சியின் பாதையில் வழி நடத்தி வந்திருக்கிறார், உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இந்த புதிய ஆண்டு நமக்கும் நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

நமது மனித சமூக அமைப்பு, தங்களுக்குள்ளே இருக்கின்ற உடன்பாடுகளாலும் ஒப்பந்தங்களாலும் கட்டுப்படுத்தப்படுவதால் இந்த சமூகத்தைச் சிறப்பாகச் செயல்படவைக்கிறது. ஒருவருக்கொருவர் துணைபுரிய விரும்பும் தனி நபர்களுக்குள்ளும் குழுக்களுக்கும் இடையே இருக்கிற உடன்படிக்கையைத் திருமறையில் நாம் காண்கிறோம். 1. அமைதி உடன்படிக்கை (ஆதியாகமம் 14:13, 21:22,23, 26:28) 2. நட்பின் உடன்படிக்கை (1சாமுவேல் 23:18) 3. திருமண ஒப்பந்தம் (மல்கியா 2:14).

பொதுவாக இந்த உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் சமநிலையற்றதாக இருக்கும். வலிமை மிக்கவர்கள், எளியவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக வாக்களிப்பதும், வலிமை குறைந்தவர்கள் வலிமை மிக்கவர்களுக்குப் பணிபுரிய ஒத்துழைப்பதாகவும் வாக்கு அளிப்பார்கள். இதனால் வலிமை மிக்கவர்கள் தங்களின் தேவைக்கு ஏற்றவாறு கடுமையான நிபந்தனைகளை விதிப்பார்கள். உடன்படிக்கை செய்து கொண்டதன் அடையாளமாக சில மரபுகளாலும் சடங்குகளாலும் உடன்படிக்கைப் புனிதப்படுத்தப்படுகிறது. (யாத்திராகமம் 24:3-8). குறிப்பாக விலங்குகளை இரண்டாக வெட்டி வைத்து, எதிர்காலத்தில் இந்த உடன்படிக்கையை மீறினால் கிடைக்கும் சாபங்களை அறிவித்துக் கொண்டே அவ்விலங்குகளின் துன்டங்களிடையே கடந்து செல்வார்கள். (எரேமியா 34:18) இறுதியாக, உடன்படிக்கைச் செய்ததற்குச் சாட்சியாக இருக்குமாறு ஒரு மரம் அல்லது கல் நாட்டப்படும். (ஆதியாகமம் 21:33, 31:48)

ஆனால் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை முற்றிலும் மாறுபட்டது. வலிமைமிக்க ஆண்டவர் எளிய மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் திருமறை விளக்குகிறது. அனைத்து ஆற்றலும், வலிமையும் நிறைந்த சர்வ வல்ல ஆண்டவர், உன்னதத்திலிருந்து தாழ குனிந்து பூமியின் கடை முனையில் கிடைக்கின்ற, மிக சிறியக் கூட்டமான இஸ்ரவேல் மக்களின் கரத்தைப் பிடித்து, நான் உன் தேவன் நீ என் ஜனம் என்று உடன்படிக்கை செய்து கொள்கிறார். (உபாகமம் 7:6,7) இந்த உடன்படிக்கை வழியாக பூமியின் எல்லா ஜனங்களிலும் நீங்கள் என் உடைமையாய் இருப்பீர்கள் என்று ஆண்டவர் வாக்குக் கொடுக்கிறார். (யாத்திராகமம் 19:5,6 23:20-31) இதற்குப் பிரதிபலனாக ஆண்டவரை மட்டுமே அவர்கள் வழிபட வேண்டும் என்கின்ற நிபந்தனையையும் விதிக்கிறார்.

இறைவன் தமது உடன்படிக்கையில் உறுதியாக இருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாமல் உடன்படிக்கையை முறித்துப் போட்டார்கள். (எரேமியா 22:9) ஆனாலும் ஆண்டவர் மனுக்குலத்தின் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார் என்பதினால் புதிய உடன்படிக்கையை பண்ணுவேன் என்கிறார். அதை அவர்கள் இருதயத்தில் எழுதுவேன் என்கிறார். (எரேமியா 31:31,32,33) இந்த புதிய உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் வழியாக நம்மோடு ஆண்டவர் செய்திருக்கிறார். கிறிஸ்து மீது விசுவாசமாக இருக்கிற அனைவரும் அவருடைய பிள்ளைகள் ஆகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். (யோவான் 1:12) முன்பு தூரமாயிருந்த நாம், இறைவனோடு சேருகின்ற சிலாக்கியத்தைக் கிறிஸ்து இயேசு வழியாகப் பெற்றிருக்கிறோம். (எபேசியர் 2:13-19) எனவே இந்த புதிய ஆண்டில் கடவுளின் உடன்படிக்கையை நாம் ஏற்றுக்கொண்டு அதை நம்முடைய தாக்குவோம். நமது இதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவரது வல்லமையினால் ஒரு பொழுதும் பின்வாங்காதிருக்கத் தீர்மானிப்போம்.

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
**Rev. Dr. A. Samuel**

**"தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையும் கொடுத்து மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக." ஆதியாகமம் *27: 28***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பங்களையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன் இந்த புதிய ஆண்டு நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

யாக்கோபு என்கிற பெயர் "குதிங்கால்" என்கின்ற எபிரேயப் பெயரோடு தொடர்புடையது. அதோடு தந்திரமாக செயல்படுதல், காலை வாரி விடுதல், பிறர் உரிமையை பறித்தல் போன்ற பல பொருட்கள் உண்டு. அன்றைய காலகட்டத்தில் சாகும் தருவாயில் இருக்கின்ற வயதான மக்களுக்கு எதிர்காலத்தைப் பற்றி தனி சிறப்பான காட்சி வெளிப்படுவதாக நம்பினார்கள். ஆகவே இந்த முதியவர்களின் சொற்கள் சிறப்பாக ஆசீர்வாதம் என்றாலும் சரி, சாபம் என்றாலும் சரி அது அதிக ஆற்றல் மிக்கதாகவே கருதப்பட்டது. எனவே தான் தந்தையை ஏமாற்றி யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாலும் இதில் இருக்கின்ற சிறப்பு கருத்துக்களை தியானிப்போம்

**(a)கடவுளின் திட்டம் அது எப்படியும் நிறைவேறும்:_**

அக்காலத்தில் குடும்பத்தில் மூத்த மகனுக்கு சிறப்புரிமை உண்டு. அதோடு மட்டுமல்லாது மூத்த மகனின் வம்ச வழியாகத்தான் குடும்ப உறவு கணக்கிடப்படுகிறது. எனவே தலைமகன் பிறப்புரிமை அல்லது சேஷ்டப்புத்திரப் பாகம் என்பது சிறப்புமிக்கது. யாக்கோபு ஏமாற்றி ஏசாவின் சேஷ்டப் புத்திரப் பாகத்தை பெற்றுக் கொண்டாலும் யாக்கோபு பிறப்பதற்கு முன்னதாகவே ஆண்டவர் அவனை ஆசீர்வதிக்கிறார். (ஆதியாகமம் 25 23) அதோடு யாக்கோபின் வம்ச வழியில் உலகை மீட்கின்ற மேசியா பிறக்க வேண்டும் என்பது கடவுளின் திட்டம் இயாக்கோபு ஏசாவை ஏமாற்றிப் பெற்றாலும் ஆண்டவர் தமது திட்டத்தை நிறைவு செய்கிறார். இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் சிலுவை மரணம் என்பது கடவுளின் திட்டம். யூதாஸ் பணத்திற்காக இயேசுவை காட்டிக் கொடுத்தாலும் ஆண்டவர் அவருடைய திட்டத்தை நிறைவு செய்கிறார் .ஆகவே மனிதன் தனது திட்டப்படி என்ன முயற்சி செய்தாலும் ஆண்டவர் தமது திட்டத்தையே நிறைவு செய்வார்.

**(b) யாக்கோபு கடவுளின் இரக்கமும் :-**

எத்தனாகிய யாக்கோபையோ ஆண்டவர் மீட்பின் திட்டமாகிய மேசியா தோன்றுவதற்கு தெரிந்தெடுத்தார். என்கின்ற கேள்விக்கு மனிதனிடம் எந்த தகுதியும் இல்லாமல் இறைவன் அவனுக்கு அளிக்கும் உதவி அல்லது சலுகை தான் இறக்கம் என்பதே விடையாக அமையும். மாமன் லாபானையும் சூழ்ச்சினாலும் தந்திரத்தினாலும் யாக்கோபு வெற்றி கொண்டான். லாபன் வீட்டில் சூழ்ச்சியினால் யாக்கோபுக்கு மிகுந்த செல்வம் சேர்ந்தது காரணம் ஆண்டவரின் கிருபை ஆண்டவர் அவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் ஒருவேளை யாக்கோபுக்கு தகுதியே இல்லை என்றாலும் ஆண்டவரின் கிருபை மட்டும் அவனுக்கு இல்லை என்றால் அவன் வெற்றி பெற்றிருக்க இயலாது.

ஆனால் யாக்கோபு செய்த சூழ்ச்சிக்கும் ஏமாற்றுதலுக்கும் மிகப்பெரிய விலை கொடுக்க வேண்டிய நிலையும் அவனுக்கு ஏற்பட்டது. தன் பெற்றோரை விட்டு ஓடினான் .பின்பு அவர்களை அவன் சந்திக்கவே இல்லை. மாமனின் ஆடுகளை மேய்க்கிறான் அவனால் ஏமாற்றவும் படுகிறான். தன் அண்ணன் ஏசாவைச் சந்திக்கவும் பயந்தான் .ஆனால் கடவுளிடம் அர்ப்பணித்துப் போராடி வெற்றி பெற்று இஸ்ரவேல் என்று பெயர் சூட்டப்பட்டான் (ஆதி32 :26 27) கடவுளின் இரக்கத்தால் அவை அனைத்தையும் பெற்றுக் கொள்கிறான் தகுதியில்லாத யாக்கோபை ஆண்டவர் தமது மிகுந்த இரக்கத்தால் தகுதிப் படுத்துகிறார்.

**(C)இரக்கம் பெற்ற யாக்கோபுக்கு ஆசீர்வாதம்:-**

யாக்கோபு அணிந்திருந்த வேட்டைக்காரனான ஏசாவின் உடைகளிலிருந்து எழுந்த மணம் தனக்கு ஆண்டவர் வாக்குறுதி செய்த கானா நாட்டின் ஆசிர்வதிக்கப்பட்ட செழுமையான விளைவை ஈசாக்குக்கு ஞாபகம் ஊட்டியது (ஆதி.27:27,28). மத்திய தரைக்கடலிலிருந்து மேல்காற்று கொண்டுவரும் ஈரமான காற்று பாலஸ்தீனத்தில் இரவு வேளையில் குவிந்து பணியாகி நிலத்தை நனைத்து விடும். இது தாவர வளர்ச்சிக்கு மிகவும் சாதகமாக இருக்கும். குறிப்பாக வெயில் காலங்களிலும் மழை குறைவான காலங்களிலும் செடிகளும், பயிர்களும் பட்டுப்போகாமல் பாதுகாக்கிறது. இந்தப் பனி செழிப்புக்கு அடையாளமாகக் கூறப்படுகிறது. செடிகளுக்கு எல்லா காலங்களிலும் காலங்களிலும் பனி ஆசிர்வாதமாய் இருப்பது போல் கடவுளின் இரக்கம் பெற்ற மக்களுக்கு எப்பொழுதும் ஆசீர்வாதம் உண்டு. எத்தன் என்று பெயர் பெற்ற யாக்கோபு மீது கடவுள் இரக்கம் பாராட்டி அவன் சந்ததியில் இயேசுவைத் தோன்றச் செய்யும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றியதோடு அவனை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். இந்த புதிய ஆண்டிலே தகுதியில்லாத நம்மையும் ஆண்டவர் தகுதிப்படுத்தி தமது திட்டத்தை நம்முடைய வாழ்வில் நிறைவேற்றி நம்மையும் நம்முடைய குடும்பங்களையும் ஆசிர்வதிப்பாராக. கர்த்தருடைய ஆசீர்வாதம் இந்த ஆண்டிலும் உங்களோடு ம், குடும்பத்தோடும் எப்பொழுதும் நிறைவாய் இருப்பதாக.
கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## புதிய உடன்படிக்கை – கிருபையின் மகத்தான அழைப்பு

**உடன்படிக்கை** (Covenant) என்பது இரு தரப்புகளுக்கிடையில் செய்யப்படும் உறுதியான ஒப்பந்தம் அல்லது உடன்பாடு என்பதைக் குறிக்கும்.

வேதாகமத்தில் உடன்படிக்கை என்பது, தேவன் மனிதருடன் செய்த பரிசுத்தமான, மாற்றமற்ற வாக்குறுதியான உடன்பாடு என்பதைக் குறிக்கிறது.

வேதாகமம் முழுவதும் தேவன் மனிதருடன் நடத்தும் உறவு "உடன்படிக்கை" என்ற சொல்லில் வெளிப்படுகிறது. ஆதாமிலிருந்து நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடன் தேவன் செய்த உடன்படிக்கைகள், மனிதனை மீட்கும் தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துகின்றன. இவ்வெல்லா உடன்படிக்கைகளின் நிறைவேறுதலாக, இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

**பழைய உடன்படிக்கையின் பின்னணி**

பழைய உடன்படிக்கை பெரும்பாலும் நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டது. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட சட்டம், பாவம் என்ன என்பதை மனிதனுக்குக் காட்டியது; ஆனால் பாவத்திலிருந்து முழுமையான விடுதலையை அளிக்கவில்லை.


"நியாயப்பிரமாணத்தினாலே பாவ அறிவு உண்டாகிறது." – ரோமர் 3:20. ஆனால் பழைய உடன்படிக்கையானது, மனிதரின் பலவீனத்தினால் குறைபாடுள்ளதாயிருந்தது. "அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே" (எபிரெயர் 8:7) என கூறப்பட்டுள்ளது. எனவே அந்தக் குறையை நிவிர்த்தி செய்ய புதிய உடன்படிக்கை அவசியமாயிற்று.

**புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தம்**

எபிரேயர் புத்தகம், இயேசு கிறிஸ்துவை புதிய உடன்படிக்கையின் நடுவராக அறிமுகப்படுத்துகிறது. "அதனால் அவர் புதிய உடன்படிக்கையின் நடுவராயிருக்கிறார்." — எபிரேயர் 9:15

பழைய உடன்படிக்கையில் மோசே நடுவர். புதிய உடன்படிக்கையில் இயேசு கிறிஸ்து நடுவர்.

“இதோ, இஸ்ரவேல் வீட்டோடும் யூதா வீட்டோடும் நான் புதிய உடன்படிக்கையைச் செய்வேன்.” – எரேமியா 31:31, என்று கூறப்பட்ட தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையில் நிறைவேறியது.




“இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது” (லூக்கா 22:20) என்றார்.

**புதிய உடன்படிக்கையின் சிறப்பம்சங்கள்**

1. பாவமன்னிப்பு – எரேமியா 31:34
2. கிருபையினாலான இரட்சிப்பு – எபேசியர் 2:8
3. அனைவருக்கும் திறந்த உடன்படிக்கை – கலாத்தியர் 3:28
4. பரிசுத்த ஆவியின் வாசம் – எசேக்கியேல் 36:26


அதாவது, புதிய உடன்படிக்கை என்பது சட்டம் அல்ல; கிருபையின் உறவு. இயேசு கிறிஸ்துவில் உள்ளவர்களுக்கு தண்டனை இல்லை. கிருபையினால் நித்திய அழிவில் இருந்து மீட்பு உண்டு. அந்த மீட்பு இயேசுவின் சிலுவை மரணத்தால், நமக்கு உண்டானது. இனி எந்த ஒரு மனிதனும் பலி செலுத்த வேண்டியதில்லை. பஸ்கா ஆட்டுக்குட்டியாக இயேசு கிறிஸ்து தம் ரத்தத்தை சிந்தி நம்மை மீட்டெடுத்தார். இது ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு மட்டுமல்ல. மனித சமுதாயம் அனைத்திற்கும் உரியது. அது பலகையில் எழுதப்பட்டதல்ல. மனிதனின் இருதயங்களில் எழுதப்பட்டது. அதாவது தேவனுக்கு பிரியமானதை மனப்பூர்வமாய் செய்ய மனிதனுக்கு விருப்பமுண்டாக்குகிறார் கிறிஸ்து. நம்மோடு வாழும்படி அவர் தந்தருளிய பரிசுத்த ஆவியானவர் அத்தகைய விருப்பத்தை நமக்குத் தருகிறார்.

தகுதியில்லாத பாவிகளான நம்மோடு, பாவமில்லாத பரிசுத்தர் உறவு கொண்டு உடன்படிக்கை செய்துள்ளது மிகப்பெரிய பாக்கியமாகும். அந்த உடன்படிக்கைக்கு நம்மை தகுதிபடுத்திக்கொள்வோம். வாக்குமாறாத இயேசு தமது உடன்படிக்கையின்படி தமது வார்த்தையின் மூலம் நித்தமும் நம்மை நடத்தி இந்த புதிய ஆண்டில் நம்மை அழகாக நடத்தி செல்வாராக.

**ஜெபசீலி ஆசீர்**

# CHILDREN'S CORNER

Dear Children,




HAPPY NEW YEAR!!

The theme this January is "**NEW COVENANT**".


A Covenant is a "Special Promise". In the bible, a covenant involves two parties (God and people) who both agree to things.

**God's Promises**: God promises to be our God, to love and protect us, to forgive our sins, and to allow us to live with Him forever (eternal life).

**Our Promises**: We promise to love God, follow His laws and commandments, and love and help others.

## What is the New Covenant?

**The New Covenant is the promise that God will forgive sin and restore fellowship with those whose hearts are turned toward Him.**





Jesus Christ is the mediator of the New Covenant, and His death on the cross is the basis of the promise (Luke 22:20).


The new covenant is relevant to the beginning of a new year because it signifies a fresh start, emphasizing transformation, forgiveness, and a new relationship with God through Jesus Christ.

To Learn more on **Biblical Covenants**, check out the video below,


Scan me!



## SAYING IT WITH PICTURES...





he did it to demonstrate his justice at the present time, so as to be just and the one who justifies those who have faith in Jesus. — ROMANS 3:26 NIV




Fight the good fight of the faith. – 1 TIMOTHY 6:12 NIV

## BOOKS OF THE BIBLE #1: GENESIS




**Author**: Moses

**When It Happened**: 4004–1635 BC

**Chapters**: 50

**Key People**: Adam, Eve, Noah, Abraham, Isaac, Jacob, Joseph

**Summary**: The book of Genesis describes God's perfect and complete creation in the beginning.

The first people, Adam and Eve, sinned, and now all people are separated from God by sin. Genesis tells about God's judgment on sin in the account of Noah and the Flood.

In spite of the world's continued wickedness, God called Abraham and promised that all nations would be blessed through him. This blessing would come through the promised Messiah—a descendant of Abraham.



# TINY TOTS SECTION

## COLOR IN...

COLORING PAGE

## Heavenly Father Keeps His Promises






ILLUSTRATION BY APRYL STOTT

## God promised to make Abraham the Father of a Great Nation



There are lots of great things you can accomplish here on the earth, but only some are on the covenant path that lead to your Heavenly Father. **Mark** the covenant paths that lead back to Heavenly Father.




# Wonderful World

By Arie Van De Graaff

We live in such an amazing world! Solve the puzzle below to find out why this world has so many different plants and animals.

Look at the box with objects in it. For each object, count how many are in the picture. Then match the letters from the box with numbers on the lines below. One is done for you.




C ___ ___ ___ ___ ___ ___ ___

3 2 4 1 5 6 8 7

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "NEW COVENANT"

1. What does God promise to give us in the New Covenant? (Jeremiah 31:33)

a. New House b. New Heart.
c. New City. d. New Name.

2. Where would God write His laws in the New Covenant? (Hebrews 8:10)

a. On stone Tablets. b. In the Sky.
c. On our Hearts. d. In His Book.

3. Who makes the New Covenant possible? (Luke 22:20)

a. Jesus b. Moses
c. David d. Jeremiah

4. What does Jesus call the cup at the Last Supper? (1 Corinthians 11:25)

a. Cup of Celebration. b. Cup of Joy.
c. Cup of New Covenant d. Cup of Pride.

5. The New Covenant brings what to our sins? (Hebrews 10:17)

a. Punishment. b. Forgetfulness.
c. Forgiveness. d. Death.

6. What gift does God put within us in the New Covenant? (Ezekiel 36:27)

a. Gold. b. His Angels.
c. New Life. . d. His Spirit.

7. What does Jesus become for us in the New Covenant? (Hebrews 8:6)

a. King. b. Treasure.
c. Mediator. d. Warrior.

8. The New Covenant replaces which covenant? (Hebrews 8:13)

a. Old covenant. b. Rainbow covenant.
c. Covenant with Noah. d. Covenant with Abraham.

9. What does the New Covenant promise believers? (John 3:16)

a. Long Holidays. b. A rich Life.
c. Pain free life on Earth. d. Eternal Life.

10. What does the New Covenant give us access to? (Hebrews 4:16)

a. Throne of Grace. b. Secret Place.
c. Treasure chest. d. God's Army.

11. What makes the New Covenant "better" than the old one? (Hebrews 8:6)

a. It has better promises. b. It has more rules.
c. It has more sacrifices. d. It has more laws.

12. What did Jesus say His blood was poured out for? (Matthew 26:28)

a. A new rule. b. The new Covenant. c. A new kingdom. d. A new Place.


## Getting Ready for Baptism

Your Name:-

Think about the below questions?!


- Do you believe that Jesus Christ is your Savior?
- Do you try your best to obey the commandments?
- Do you feel ready to make a covenant with Heavenly Father?

Follow the maze through each picture to see how you can take Jesus's name upon you. (Hint: Don't cross over any black lines.)



# KEEPING THE COVENANT DAILY WITH GOD

**What would you say next? Write it in the bubble.**




## What can you do?

1. Suggest a new activity.
2. Call for backup.
3. Find a friend who feels the same.





This is a great time to explain your standards.

Talk to a parent ahead of time about an "escape plan" for dangerous or uncomfortable situations.

Be brave and help someone else be brave too!

## PARABLES DECODED #1:

## THE SOWER AND THE SEED – Matt. 13:3 - 23




## TIMELESS TRUTHS

### a. Prepare Your Heart Like Good Soil

Before seeds can grow, the soil must be ready. Likewise, we must open our hearts to God's truth through prayer, humility, and obedience.

### b. Beware of Distractions

The thorny ground meaning warns us against letting greed, anxiety, and worldly desires choke our faith. Spiritual growth needs focus and discipline.

### c. Stay Rooted During Challenges

Rocky soil reminds us that emotional faith fades when faced with hardship. Deep spiritual roots grow through perseverance, community, and daily devotion.

### d. The Word Needs Nourishment

Just as plants need sunlight and water, God's Word must be nourished by reflection, worship, and good works to bear fruit.

# MISSIONARY STORIES:

## The Covenant That Transformed an Island

When missionary John G. Paton went to the New Hebrides, the islanders were known for violence and hostility.



One night, warriors surrounded his hut to kill him. Paton prayed, trusting God's New Covenant promise: "I will write My laws on their hearts" (Hebrews 8:10). Miraculously, the attackers left.

Years later, the chief who led the attack became a Christian. He told Paton, "We couldn't harm you—shining men stood guard around your hut."

The chief's life changed completely, proving the power of the New Covenant—new hearts, new lives, and God's protecting presence.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of January is: ______________________________.
2. What is the New Covenant? __________________________________________

   __________________________________________________________________
3. When did the events of the Book of Genesis take place? ______________
4. List 4 Timeless Truths from the Parable of the Sower
   - a. _____________________________; c. ________________________________
   - b. _____________________________; d. ________________________________
5. When missionary ______________________ went to the__________________, the islanders were known for ___________________________.

**Dear Children,**

**As we welcome the New Year 2026, remember that God gives us new hearts to follow Him. His New Covenant means He is always with us and helps us grow.**

**God bless,**

**Mrs. Briliya Jeyaseelan**

# Answers to December Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "IMMANUEL"

1. b. God is with us.
2. d. Isaiah
3. a. Jesus.
4. d. With his People
5. b. To Be with us and save us.
6. c. Close to us
7. d. The Angel.
8. a. Trust and pray
9. a. Christmas.
10. b. Keeps us strong and safe.
11. a. Be strong, courageous and trust God.
12. a. Matthew.

## Complete the Short Review Below...

6. The theme for the month of December is **Immanuel.**
7. List 3 take-away points that we can learn from "the Immanuel" concept.

   a. **God Is Always With Us**; c. **God Loves Us Deeply**

   b. **God Helps and Guides Us**;
8. Yahweh means "**I am**."
9. **Hudson Taylor**, a missionary to **China** in the 1800s.
10. Thaddeus took the gospel message north, where he performed miracles, preached, and founded a church in **Edessa, an area in modern Turkey**.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

## விடையைக் கண்டுபிடியுங்கள்!!!!

? யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையில் யூதா மனுஷரின் எண்ணிக்கையில்

- + தெலாயிமிலே காலாட்களின் எண்ணிக்கையை கழித்து
- + மரியாள் எலிசபெத்துடனே இருந்த மாதங்களின் எண்ணிக்கையை பெருக்கி
- + யோபுவுக்கு இருந்த ஒட்டகங்களின் எண்ணிக்கையை வகுத்து
- + ஈசாக்கு பிறந்த போது ஆபிரகாமின் வயதை பெருக்கி
- + சுட்டெரித்த புத்தகங்களின் கிரயத்தொகை வெள்ளிக்காசு எண்ணிக்கையை கூட்டி
- + ஆசேர் புத்திரரில் யுத்தத்திற்குத் தேறினவர்களாய் சேவகம் பண்ண போகத்தக்கவர்களின் எண்ணிக்கையை கழித்து
- + யாக்கோபு லாபான் வீட்டிலே இருந்த வருஷ காலத்தின் எண்ணிக்கையை வகுத்து பேழையின் அகலம் முழ எண்ணிக்கையை கூட்டி
- + மூப்பர்களின் எண்ணிக்கையை கழித்தால்

? கிடைக்கும் எண் என்ன**???**

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

1. மோசே யாத். 24:4
2. இயேசு மத்தேயு 10:2
3. சாலொமோன் 1இராஜா.10:16,20
4. இஸ்மவேல் ஆதி. 17:20
5. எலிசா 1இராஜா.19:19
6. மோசே உபாகமம் 1:5,23
7. யோசுவா யோசுவா 4:9
8. இயேசு } லூக்கா 2:42
   மனாசே } 2 ராஜா. 21:1
9. சாலொமோன் 1இராஜா. 4:7
10. மோசே லேவி. 24:5,1
11. வச்சிரக்கல்
    இந்திரநீலம்
    சந்திரகாந்தம்
    மரகதம்
    கோமேதகம்
    பதுமராகம்
    சுவர்ணரத்தினம்
    படிகப்பச்சை
    புஷ்பராகம்
    வைடூரியம்
    சுநீரம்
    சுகந்தி
    } வெளி. 21: 19,20
12. மரியாள் - மத்தேயு 1:18
    யோசேப்பு - மத்தேயு 1:18
    சகரியா - லூக்கா 1:5
    எலிசபெத்து - லூக்கா 1:5
    காபிரியேல் - லூக்கா 1:19
    சிமியோன் - லூக்கா 2:25
    அன்னாள் - லூக்கா 2:36
    அகுஸ்துராயன் - லூக்கா 2:1
    அர்கெலாயு - மத்தேயு 2:1
    தாவீது - மத்தேயு 1:20

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Desigta Jaison
3. Mr.Emmanuel
4. Mrs.Esther Pauline Rani
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Helen Sharmila Ray
8. Mrs.Hame RajaGuru
9. Mr.Jeba Jino
10. Mrs.Jasmine Sobha
11. Mrs.Jebaseeli Asir
12. Mrs.Dr.Jenila Gannraj.L
13. Mr.Jo Ernast
14. Mrs.Kishi Maher
15. Mrs. Malar Ernast
16. Mrs.Manuel Sarah
17. Mrs.Peppin Jenson
18. Mrs.Persis John
19. Mr.Prawin Durai Sam
20. Mrs.Priya Ranjith Kumar
21. Mrs.Praveena Arun
22. Mr.Raja Guru
23. Mrs. Shobana Milton
24. Mrs.Selvi George
25. Mrs.Sheneegah Stanly
26. Mrs.Sharmila Rajesh
27. Mrs. Shajeethe Gracy
28. Mrs. Suni Smila Edwin
29. Mrs.Sweetilin Frank
30. Mrs.Valentine Sharmila Paul
31. Mrs. Vithya Dinesh

## Chilldren who answered December – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Brightson Timothy Raj
4. Benson Immanuel Raj
5. Daniel Vanya (Ruwais)
6. Danion Lemuel
7. Diyas Dinesh
8. Dafina Dinesh
9. Darion Lemuel
10. Evelyn Loria V
11. Evaniya Sherin
12. Evangelia Sharon
13. Efrona
14. Effrin
15. Hadriel Adventier
16. Keren Tesso
17. Kev Shannen P.S
18. Kavin Immanel
19. Kavi yalini
20. Jaslin Shanna
21. Jessica Eban
22. Jevlyn Ana
23. Jeya Jehosheba Maher
24. Jim Scott
25. Jen Scudd
26. Jeffrey Samuel
27. Jenessa Johnson
28. Joel Abrakam
29. Joha Anit Manuel
30. Johan Sam Manuel
31. Leona Juliet
32. Leonel I.J. Stalin
33. Linuel I.J. Sherwyn
34. Mishael Wesley (Ruwais)
35. Pristina samlynPrince
36. Rivqah Deby Rajkumar
37. Sherlyn Sana
38. Sam Jesvin Vincent
39. Starlyne Mobile
40. Steffi Priscilla .R
41. SelvaJesvin (Ruwais )
42. Yedidiah Arun (Ruwais)
43. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

## *இந்தியாவின் அப்போஸ்தலர்*

**தோமாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த காட்டுக் குதிரைகள்**

தோமா மற்ற குதிரைகளை நோக்கி, "நீங்கள் எல்லாரும் எனக்குத் தேவையென்றால் உங்களையும் என்னோடு அழைத்துச் செல்வேன். ஆனால், இப்போதைக்கு இந்த நான்கு குதிரைகள் மாத்திரம் போதும். எனவே நீங்கள் உங்கள் இடங்களுக்கு போய்விடுங்கள்" என்று கட்டளையிட்டார். அப்பொழுது அந்தக் குதிரைகள் அனைத்தும், தோமாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து முன்பு மேய்ந்து கொண்டிருந்த இடங்களுக்கு அமைதியாகத் திரும்பி சென்று விட்டன.

அந்த நான்கு காட்டுக் குதிரைகளும், இரதத்தை இழுத்துப் பழக்கப்படாதவைகளாக இருந்தும், மிக நேர்த்தியாக கொஞ்சம் கூட ஒரு அலுக்கலோ, குலுக்கலோ இல்லாமல் இரதத்தை இழுத்துச் சென்றன. மட்டுமல்ல, ஒருவரும் வழி காட்டாமலேயே அந்தக் குதிரைகள் பட்டணத்திற்குள் பிரவேசித்து, மிகச் சரியாக தளபதியினுடிஅய வீட்டின் முன் வந்து நின்றன. அதைக் கண்ட தளபதி மிகவும் ஆச்சரியப்பட்டான். அப்பொழுது அங்கிருந்த அனைவரும் இரதத்தை இழுத்து வந்த அந்தக் காட்டுக் குதிரைகளைக் காண மிகுந்த ஆச்சரியத்தோடு கூடி வந்தனர்.

**பிசாசுகளைத் துரத்தும் தேவ வல்லமை**

தோமா கேட்டுக் கொண்டபடியே, பிசாசின் பிடியினில் சிக்கியிருந்த சிப்போரின் மனைவியையும், மகளையும் அங்கே அழைத்து வந்தனர். அப்போது அவர்களுக்குள் இருந்த அசுத்த ஆவிகள் அவர்கள் இருவரையும் அலைக்கழிக்கத் துவங்கின. தோமா இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்களை விட்டு வெளியேறுமாறு அந்த அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிட்டார்.

ஆனால், அவர்களுக்குள் இருந்த ஆயிரத்திற்கும் அதிகமாக அசுத்த ஆவிகள், அவர்களை அலைக் கழித்ததோடு, அவர்களைக் கீழே தள்ளி, பேச்சு மூச்சற்ற நிலைக்குள் கொண்டு சென்று விட்டன. அதைப் பார்த்த தோமாவிற்குள் இருந்த விசுவாசம் சிறிது குறைந்தபடியினால் சற்று கலக்கம் அடைந்தார்.

அப்போது, அங்கே நின்றிருந்த காட்டுக் கழுதைகளில் ஒன்று தேவ வல்லமை பெற்று வாயைத் திறந்து, "தோமாவே, உம்முடைய தேவனாகிய இயேசு கிறிஸ்து உம் மூலமாக வல்லமையான காரியங்களைச்

செய்து வருகிறார். அவர் உம்மை ஊக்கப் படுத்துவதோடு, உமக்குள்ளே தைரியத்தையும் உருவாக்குகிறார் என்பதை அறிந்து கொள்வீராக! ஏன் கலக்கத்தோடு நின்று கொண்டிருக்கிறீர்? பயப்பட வேண்டாம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்த வல்லமையான பல அற்புதங்களுக்கு முன்பு இது மிக அற்பமான காரியம்!" என்று சொல்லி தோமாவை உற்சாகப்படுத்திப் பேசியது. அங்கு கூடியிருந்த அனைவரும் குதிரை பேசியதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டனர்.

உடனே தோமா கர்த்தரை மகிமைப்படுத்தி, சில நிமிடங்கள் தேவனைத் துதித்துக்கொண்டே இருந்தார். அப்போது தேவ பிரசன்னம் இறங்க இறங்க தோமா அவைகளைத் துரத்தாமலேயே அவர்கள் இருவரையும் கட்டி வைத்திருந்த அந்த அசுத்த ஆவிகள் அலறி அடித்துக் கொண்டு அவர்கள் இருவரையும் விட்டு வெளியேறிப் போனது. பிசாசின் வல்லமையிலிருந்து விடுதலையான அவர்கள் இருவரும் எழுந்தனர். பல மாதங்களாக உணவு அருந்தாமல் இருந்த அவர்கள் இருவருக்கும் உடனே உணவளித்தனர்.

பின்பு தோமா, தளபதியின் குடும்பத்தினருக்கும், அங்கே கூடியிருந்த ஜனங்களுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். அனேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த, சத்தியத்தில் தேறிய ஒருவரை தோமா நியமித்தார்.

### நீதியினிமித்தம் குற்றம் சாட்டப்பட்ட தோமா

அரசனுடைய முக்கிய மந்திரியாக இருந்த சரிசியூ என்பவனுடைய மனைவி, மிக்தோனியா என்பவள், தோமாவின் போதகத்தைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டாள். அவள் மனம் திரும்புவதற்கு முன்பு வரை, மந்திரியாகிய சரிசியூ தனது நண்பர்களுடன் சேர்ந்து குடித்து வெறித்து இருக்கிற சமயங்களில் எல்லாம், மிக்தோனியாவும் அவர்களுடன் சேர்ந்து மது அருந்தியதோடு, பல தவறான காரியங்களிலும் ஈடுபட்டாள். ஆனால் இப்பொழுது அவள் மனந்திரும்பிய பிறகு அப்படிப்பட்ட எந்த விதமான பாவமான செயல்களிலும் ஈடுபட மறுத்தாள்.

எனவே, சரிசியூ தன் மனைவியை மாற்றிய தோமா மீது கோபம் கொண்டு அவரைப் பற்றி அரசனாகிய மகாதேவனிடம், "நான் உம்மிடத்தில் சில காரியங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது, தளபதியாகிய சிப்போர் நம் நாட்டிற்கு அழைத்து வந்த மந்திரவாதி போன்ற பல விந்தையான அற்புதங்களை நிகழ்த்துகிற எபிரெய மனிதனாகிய தோமா என்பவன் ஜனங்கள் மத்தியில் புதிய ஒரு கடவுளைப் பற்றி சொல்லிக்கொண்டு அலைகிறான்.

நாம் கேள்விப்படாத புதிதான நீதி நியாயங்களையும் மக்களுக்கு போதிக்கிறான். நமது ஜனங்களில் அனேகர் அவனைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். இப்பொழுது திரளான ஜனங்களை தன் கைவசம் வைத்திருக்கிற தோமா, அரசனாகிய உமக்கு எதிராகவும் ஜனங்களை திசைத் திருப்பக் கூடும். எனவே, அவனைக் கைது செய்து, அவனை சிரச்சேதம் செய்து விட்டால், அது அரசுக்கும் பாதுக்காப்பாக இருக்கும்" என்று சொன்னான்.

இந்த சம்பவத்தைக் குறித்து கேள்விப்பட்ட தளபதி சிப்போர் அரசனிடத்தில் போய், "எந்த மந்திரவாதியாலும் விடுவிக்க முடியாத பிசாசு பிடித்த என் மனைவியையும், மகளையும் தோமா விடுவித்தார். எனது மனைவியும் அவரது போதகத்தால் மனம் மாறி இருக்கிறாள். தோமா வணங்கும் தெய்வமாகிய இயேசு கிறிஸ்து வல்லமை உள்ளவரும், பரிசுத்தராயும் இருக்கிறபடியால், அவரும் பரிசுத்தத்தைப் பற்றியே போதிக்கிறார்" என்று நடந்ததைப் பற்றியெல்லாம் விபரமாக எடுத்துச் சொன்னான்.

**- தொடரும்**

# பாடல் பிறந்த கதை

**எத்தனை நாவால் பாடுவேன் [ பாமாலை 388 ]**
**(O for a thousand tongues to sing)**



**1. எத்தனை நாவால் பாடுவேன்**
**என் மீட்பர் துதியை**
**என் ஆண்டவர் என் ராஜனின்**
**மேன்மை மகிமையை.**

**2. பாவிக்கு உந்தன் நாமமோ**
**ஆரோக்கியம் ஜீவனாம்**
**பயமோ துக்க துன்பமோ**
**ஓட்டும் இன்கீதமாம்.**

***’என் நாவு உமது நீதியையும், நாள் முழுதும் உமது துதியையும் சொல்லிக்கொண்டிருக்கும்’ சங் 35:28***

நமது எல்லா அவயவங்களையும் கடவுள் தமது மகிமைக்காக உபயோகிப்பதற்காகவே நமக்கு அருளியிருக்கிறார். நமது குழந்தைகள், ‘ரெண்டு சிறு கண்கள்’ என ஆரம்பிக்கும் பாடல் ஒன்றைப் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். அதில், ‘ஓர் சின்ன நாவு அவர் சத்யம் பேச’ என்னும் ஒரு வரி உண்டு. நமது நாவுகள் கடவுளைத் துதிப்பதற்காகவே அருளப்பட்டிருக்கின்றன. இப்பாடலை எழுதியவர் முதல் கவியில் (ஆங்கிலத்தில்) ஆயிரம் நாவுகள் இருக்க விரும்புகிறார். ஆயினும், நமக்கிருக்கும் ஒரே நாவை நாம் சரியான முறையில் உபயோகப் படுத்துகிறோமா?யாக்கோபு நிருபத்தில் மூன்றாம் அதிகாரத்தில் நாவு எவ்வளவு பயங்கரமான செய்கைகளைச் செய்யக் கூடும் என விவரிக்கப் பட்டிருக்கிறது. அது அடக்கமுடியாத ஒரு மிருகத்துக்குச் சமமானது. ஒரே நாவினால் கடவுளைத் துதித்து, அவர் சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதனை சபிக்கிறோம். ‘துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது’ (யாக் 3:10). ஒருவர் ஆயிரம் நாவினால் கடவுளைத் துதிப்பதைவிட ஆயிரம் பேர் தங்கள் ஒவ்வொரு நாவினால் அவருக்கு சேவை செய்வதையே கடவுள் விரும்புகிறார். நியாயத்தீர்ப்பு நாளில் கடவுள் முன்னால் நிற்கும்போது, அவர் அளித்த நாவை

எவ்விதம் பயன்படுத்தினோம் என்னும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்த சார்ல்ஸ் வெஸ்லி (Charles Wesley) என்பவர் இரட்சிக்கப்பட்ட நாளின் முதல் ஆண்டு நிறைவு 1738ம் ஆண்டு மே மாதம், 21ம் தேதியாகும். இத்தினத்தின் ஞாபகார்த்தமாக ஒரு துதிப்பாடல் எழுத ஆவல்கொண்டு, பதினெட்டு கவிகளுள்ள ஒரு பாடல் எழுத ஆரம்பித்தார். ஆறு கவிகள் எழுதியவுடன், சில தினங்களுக்கு முன் தனது நண்பரான பீட்டர் போலர் என்பவருடன் செய்த ஒரு சம்பாஷணை அவர் ஞாபகத்துக்கு வந்தது. இருவரும் ’கடவுளைத் துதித்தல்’ என்னும் பொருளைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, ‘ஆயிரம் நாவுகள் எனக்கிருந்தாலும், அவை அத்தனையும் கொண்டு கடவுளையே துதிப்பேன்’ என்று பீட்டர் போலர் சொல்லியிருந்தார். இதை ஆதாரமாகக் கொண்டு, ‘O for a thousand tongues to sing’ என ஏழாவது கவியை ஆரம்பித்து, மீதிக் கவிகளையும் எழுதிப் பாடலை முடித்தார். இப்பாடலைப் பார்த்ததும், சார்ல்ஸ் வெஸ்லியின் மூத்த சகோதரனான ஜான் வெஸ்லி, முதல் ஆறு கவிகளையும் நீக்கிவிட்டு, ஏழாவது கவிமுதல், ஐந்து கவிகளை மட்டும் ஒரு பாடலாக வைத்துக் கொண்டார். மெதடிஸ்டு சபையின் பாட்டுப் புத்தகத்தில் இப்பாடலே முதல் பாடலாக வைக்கப் பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பின், இப்பாடலில் சில மாற்றங்கள் செய்ய ஆரம்பித்தனர். இறுதியில், வெஸ்லி முதலில் எழுதிய வார்த்தைகளே வைக்கப்பட்டன.

இப்பாடலை எழுதிய சார்ல்ஸ் வெஸ்லி என்பவர், மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்தவரான ஜான் வெஸ்லியின் இளைய சகோதரன். அவர், சாமுவேல் வெஸ்லி என்னும் ஆங்கிலச் சபைப் போதகரின் பதினெட்டாவது குழந்தையாக, 1707ம் ஆண்டு டிசம்பர் மாதம், 18ம் தேதி, இங்கிலாந்தில் எப்வெர்த் குருடனையில் பிறந்தார். இளவயதில் வெஸ்ட்மினிஸ்டர் பள்ளியிலும், பின்னர் ஆக்ஸ்வர்ட் பல்கலைக்கழகத்திலும் பயின்று 1729ல் பட்டம் பெற்றார். கல்லூரியில் பயிலும்போது, சில மாணவர்களுடன் சேர்ந்து, ‘ஆக்ஸ்வர்ட் மெதடிஸ்டுகள்’ என்னும் ஒரு கிறிஸ்தவக் குழுவை ஆரம்பித்தார். இக்குழுவே பிற்காலத்தில் ‘மெதடிஸ்டு சபையாகத் தோன்றியது. அமெரிக்காவில் ஜியார்ஜியா மாகாணத்தில் உழைத்த ஆக்ஸ்தார்ப் என்பவருக்குச் செயலாளராக வெஸ்லி இரு ஆண்டுகள் பணியாற்றியபின் இங்கிலாந்துக்குத் திரும்பி, நற்செய்திப் பணியை மேற்கொண்டார். ஆயினும், பாடல்கள் எழுதுவதையே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு, 6500’க்கு அதிகமான பாடல்கள் எழுதியுள்ளார்.

அவர் 1788ம் ஆண்டு, மார்ச் மாதம், 29’ம் தேதி தமது 81’வது வயதில் லண்டன் மாநகரில் மறுமைக்கு உட்பட்டார்.

# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஜனவரி 2026

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | வெள்ளி | 8.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 4 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 6 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 9 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church Retreat |
| | | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 11 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 13 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 16 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 18 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 20 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 23 | வெள்ளி | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 27 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 31 | சனி | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – ஜனவரி 2026

| | |
|---|---|
| **02-01-26** | |
| பாமாலை – 2 | உம்மை துதிக்கிறோம் யாவுக்கும் |
| பாமாலை – 87 | விண் மீன் நோக்கி களிப்பாய் |
| கீர்த்தனை – 34 & 17 | அரசனைக் காணாமலிருப்போமோ<br>கண்களை ஏறெடுப்பேன் |
| பாமாலை – 33 | இந்நாள் வரைக்கும், கர்த்தரே |
| **09-01-26** | |
| பாமாலை – 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை – 302 | என்தன் ஜீவன், இயேசுவே |
| கீர்த்தனை – 86 & 77 | சுந்தரப் பரம தேவ மைந்தன்<br>சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் |
| பாமாலை – 212 | பகலோன் கதிர் போலுமே |
| **16-01-26** | |
| பாமாலை – 16 | ஆ கர்த்தாவே, தாழ்மையாக |
| பாமாலை – 361 | ஒப்பில்லாத திவ்விய அன்பே |
| கீர்த்தனை – 217 & 79 | அன்பே பிரதானம் – சகோதர<br>தோத்திரம் செய்வேனே |
| கீர்த்தனை – 4 | சீர்திரியேக வஸ்தே நமோ நமோ |
| **23-01-26** | |
| பாமாலை – 10 | போற்றிடு ஆன்மமே சிஷ்டி |
| பாமாலை – 175 | ஆதியில் இருளை அகற்றி |
| கீர்த்தனை – 98 & 105 | ஆவியை மழைபோலேயூற்றும்<br>தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் |
| கீர்த்தனை – 320 | மங்களம் சதா – ஜெய மங்களம் |
| **30-01-26** | |
| பாமாலை – 267 | போற்றும் போற்றும் |
| பாமாலை – 264 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை – 197 & 83 | கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே<br>இயேசுவின் நாமமே திருநாமம் |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |

# திருமறை பாட ஒழுங்குகள் – ஜனவரி 2026



| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **02-01-26** | கடவுளின் வெளிப்பாடு (பிரசன்னத் திருநாள்) | ஆதி. 16:3-16 | அப். 16:1-15 | மத்தேயு 2:1-12 | - |
| **09-01-26** | இயேசுவின் ஞானஸ்நானம்: அடையாளத்தையும் பணியையும் உறுதிப்படுத்துகிறது | யாத். 3:1-15 | கலா. 4:1-7 | மத்தேயு 3:1-17 | 98 |
| **16-01-26** | அனைவருக்கும் ஆண்டவரின் அன்பு | ஆதி. 12:1-7 | ரோமர் 8:31-39 | யோவான் 15:9-17 | - |
| **23-01-26** | பவுலின் மனமாற்றம் | எரேமியா 1:4-10 | அப். 9:1-18 | மத்தேயு 19:23-30 | 67 |
| **30-01-26** | இறைவனே நீதியுள்ள நீதிபதி | ஆதி. 18:20-33 | ரோமர் 3:20-31 | யோவான் 8:1-11 | |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **06-01-26** | நீதிமொழிகள் | 22:16-29 | Tourist Club |
| **13-01-26** | நீதிமொழிகள் | 23:1-12 | Al Wadha |
| **20-01-26** | **ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி** | | |
| **27-01-26** | நீதிமொழிகள் | 23: 13-25 | Hamdan |

# HAPPY BIRTHDAY



| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Newline Selvakumari |
| 2 | Mrs. | Annie Shelton Sam |
| 2 | Master | Jenish J |
| 5 | Mrs. | Mathi Malar |
| 5 | Baby | James Bezalel |
| 5 | Mr. | Rovin Samuel |
| 7 | Mr. | Selvin Samuel |
| 8 | Ms. | Joanna R.S. |
| 8 | Mr. | Jenson Soundar Raj K |
| 9 | Miss. | Juwana Steffi P |
| 9 | Mrs. | Angelin Prasanna |
| 9 | Master. | Vimal Melwyn. R |
| 10 | Mrs. | Thamarai Selvi |
| 11 | Mr. | Paul Emerson Karunakaran |
| 12 | Ms. | Dhini Shekinah Albert |
| 12 | Mrs. | Nanthini Rajkumar |
| 13 | Miss. | Joanna Paul Jino |
| 15 | Mrs. | Jeba Samuel |
| 15 | Mr. | Uday Saul |
| 15 | Mr. | Judson Sundaradhas |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| **16** | Mrs. | Adeline Crishanth |
| **16** | Mrs. | Desigta Thomas |
| **16** | Mr. | Nithin Sekhar |
| **17** | Dr.Mrs. | Savitha Rajakumar |
| **17** | Mrs. | Peppin Bright |
| **18** | Master | Jarick Aaron |
| **19** | Ms. | Joha Anit Manuel |
| **20** | Mrs. | Epsy Janet Bai |
| **20** | Master. | Jershan Selva Shaji |
| **21** | Mrs. | Princy Catherine |
| **22** | Mr. | Albert Raj T |
| **24** | Ms. | Caron Sylvia |
| **24** | Mrs. | Ageno Simple |
| **25** | Dr.Mr. | Selastin David Pandian |
| **25** | Mrs. | Vidhya Jebas |
| **25** | Mrs. | Latha Santhosamani |
| **25** | Mrs. | Sharon Deborah P |
| **26** | Mr. | Galvin Robert |
| **27** | Ms | Merlin Deva Kirubi |
| **27** | Mrs. | Gnanaselvi |
| **28** | Ms. | Binu Jeritta |
| **28** | Mr. | Jeslin Raj S |
| **29** | Master. | Johan Sam Manuel |
| **30** | Ms. | Elizabeth Miraclyn |
| **30** | Master. | Aarvin Prasith |
| **31** | Mrs. | Agnes Regini Arun |
| **31** | Baby | Giselle Benny |

# HAPPY ANNIVERSARY!

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr. & Mrs. | Stephenson |
| 4 | Mr. & Mrs. | Solomon Susinder |
| 4 | Mr. & Mrs. | Sundar Jebakumar T. |
| 6 | Mr. & Mrs. | Renald Daniel R |
| 9 | Mr. & Mrs. | Jose Joseph Raj |
| 9 | Mr. & Mrs. | Benny Emmanuel |
| 10 | Mr. & Mrs. | Sathia Saul Raj P S |
| 11 | Mr. & Mrs. | Jenson Soundar Raj K |
| 19 | Mr. & Mrs. | Praveen Sharon |
| 21 | Mr. & Mrs. | Johnson Prabu |
| 22 | Mr. & Mrs. | Samuel Bhaskar W |
| 25 | Mr. & Mrs. | Yabez Raj |
| 26 | Mr. & Mrs. | Yuvesh Ray |
| 26 | Mr. & Mrs. | Rajan Sagariya Nadar |
| 26 | Mr. & Mrs. | Ansel Regi |
| 26 | Mr. & Mrs. | Daniel Abraham |
| 27 | Mr. & Mrs. | Vethakkan Pandian |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



பிப்ரவரி **மாத தலைப்பு**

## மருத்துவச் சேவைப் பணி

***Medical Mission***







Carol Service






Mrs.Goldina,Mrs.Jenis & Mrs.Agita
சிறப்பு பாடல்
"The hollowed comes again"
By











Christmas Gospel Meeting






# Women's Fellowship Christmas Meet














HAPPY
2026
New Year